**Starting time 11.55 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 36/2003**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 11.09.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரபாண்டியன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>1-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>** நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விலாசத்தில் தான் வசிக்கிறேன் என்பதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், விவசாயம். என்னுடைய நிலம் எந்த ஊரில் உள்ளது என்றால், அப்பமசமுத்திரம். என்னுடைய சொத்தின் புல எண், விஸ்தீரணம் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

2. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், ஞாபகமில்லை. ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் 1959-ல் ராமநாயக்கன்பாளையம் கூட்டுறவு குடியேற்ற சங்கம் துவக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், ஆமாம். அதில் யாரெல்லாம் உறுப்பினர்கள் யார் சந்தா செலுத்தி வருகிறார்கள், நான் அதில் உறுப்பினரா போன்ற விவரங்கள் தெரியுமா என்றால், நான் உறுப்பினர் இல்லை. நானே உறுப்பினராக இல்லாதபோது அந்த சங்கத்தின் உறுப்பினர்கள் யார் என்பது குறித்து எவ்வாறு தெரியும் என்றால், எனது தாத்தா அந்த சங்கத்தின் 66 மெம்பர்களில் ஒருத்தராக இருந்தார், அதற்கான ஆதாரம் எதுவும் ஒப்படைத்துள்ளேனா என்றால், இல்லை.

3. எனது பிரமாண வாக்குமூல சங்கதிகளை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால், ஆமாம். எனது பிரமாண வாக்குமூல சங்கதிகள் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும், அதனால் அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றாலும், சரியல்ல. இந்த வழக்கை யார் யார் மீது எதற்காக போட்டுள்ளார்கள் என்றால், செல்லம்மாள் பாகப்பிரிவினைக்காக போட்டு வழக்கு நடத்தி வருகிறார்.

4. எவ்வளவு ஏக்கர் நிலத்துக்கு செல்லம்மாள்வழக்கு போட்டுள்ளார் என்றால், 7 ½ ஏக்கர் நிலத்துக்கு போட்டுள்ளார். அதன் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால், தெரியும். புல எண். 75/3, 74/1, 73/7 விஸ்தீரணம் 7 ½ ஏக்கர். புல எண். 75/3-ல் 5 ஏக்கர். 74/1-ல் 2 ½ ஏக்கர். 73/7 பக்கத்து காடு. நான் கூறிய அனைத்துமே தவறு என்றாலும், அங்கு 7 ½ ஏக்கர் நிலமே இல்லை என்றாலும், எனக்கு எந்த விவரமும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

5. 1-ஆம் பிரதிவாதி மற்றும் வாதி எங்கு குடியிருக்கிறார்கள் என்றால், காமராஜ் நகர். 1-ஆம் பிரதிவாதிக்கு 03.06.1992 தேதியன்று அரசாங்கத்தால் வழங்கப்பட்ட டி நமுனா எண். 20/1401/03.06.1992 மூலம் 3 ஏக்.31 செண்ட் நிலம் வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். 1-ஆம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள நிலமானது அவரது சுயார்ஜித சொத்து என்பதால் பாகப்பிரிவினை கோர இயலாது என்றால், சரியல்ல.

6. அந்த டி நமுனா அடிப்படையில் 1-ஆம் பிரதிவாதி தன்னுடைய பெயருக்கு வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் பெற்றுள்ளார் என்றால், பொன்னுசாமியும் வாங்கியுள்ளார், வள்ளியும் வாங்கியுள்ளார். அங்கமுத்து அரசாங்க வேலையில் ஜீப் டிரைவராக இருந்ததால் செல்லம்மாளுக்கும் அது பொருந்தும் என்று விட்டுவிட்டார். மேற்படி சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. நான் பக்கத்து காட்டுக்காரர்.

7. வீரமுத்து ஜீப் டிரைவராக இருந்தார் என்பதற்கான ஆதாரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். டி நமுனா அடிப்படையில் 1-ஆம் பிரதிவாதி வருவாய் துறை ஆவணங்களை தனது பெயரில் மாற்றிக் கொண்டு செல்லியம்பாளையம் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்று அதையும் தற்போது வரை திருப்பி செலுத்தி வருகிறார் என்றால், அதுபற்றி எனக்கு

தெரியாது. எனவே வழக்கு சங்கதிகள் என்னுடைய பிரமாண வாக்குமூல சங்கதிகளும் எனக்கு தெரியாது என்றாலும், நான் வாதி கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.11 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**